செய்தி வெளியீடு எண்: 121 நாள்: 12.02.2020

## செய்திக்குறிப்பு

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்களை இன்று (12.02.2020) தலைமைச் செயலகத்தில் பிரான்ஸ் நாட்டின் Center-Val de Loire மாநிலத்தின் கலை பண்பாட்டு அமைச்சர் Mr.Olivier FREZOT, மற்றும் அந்த துறையின் இயக்குநர் Mrs.Marie CHENE, மற்றும் அத்துறை அலுவலர்களான Mrs.Anais RAMBAUD, Mrs.Lisa BONNET, Mrs.Milena DURUDAVD ஆகியோருடன் பிரான்ஸ் மற்றும் தமிழ்நாட்டுனான கலை மற்றும் பண்பாடு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னேற்றம் குறித்தும், தென்னக பண்பாட்டு மையத்தினுடன் இணைந்து இசை, நாடகம் ஆகிய கலைகளை அந்நாட்டின் நகரங்களில் நடத்திடுதல் குறித்தும் கலந்துரையாடினர். மேலும், பிரான்ஸ் மற்றும் தமிழ் இசைக்கலைஞர்களுடன் இணைந்து தமிழ் இசையில் கூட்டு இசைப்படைப்பினை (Fusion) தயாரித்து அதனை தமிழகத்திலும், பிரான்சிலும் நடத்திட முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், தமிழக அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அசோக் டோங்ரே, இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறையின் இயக்குநர் திருமதி.கலை அரசி, இ.ஆ.ப., மற்றும் கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் முனைவர் ச.சூரிய பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**